<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 18.11.2025 அ.வ.எண். 112/2020, வா.சா.1.மகாலிங்கம், த/பெ. ராமபோயன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் 8 ஆகும். தாவா சொத்து பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் என்ன என்றால் வீட்டு வரி செலுத்திய ரசீது தான் ஆவணமாகும். வா சா ஆ 1 யார் யார் பெயரில் உள்ளது என்றால், எனது பெயர், பிரதிவாதி பெயர் உள்ளது. கூட்டுப்பட்டாவாக தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது பெயரில் தனிப்பட்ட முறையில் உள்ளது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல, நான் வேலைக்காக கேரளா சென்றிருந்த போது இந்த பிரதிவாதி அவர் பெயரையும் சேர்த்து பட்டா பெற்றுவிட்டார்.

2) மேற்படி விவரத்தை எனது பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். 1997 ம் ஆண்டே கூட்டுப்பட்டாவாக தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி பெயரையும் சேர்த்து எனது பட்டாவோடு கொடுத்தற்கு நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். நான் நடவடிக்கை எடுத்ததற்கான அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை,. பிரதிவாதி தங்கவேல் தாவா சொத்திற்கு வாடகைதாரராக வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி அ.வ.எண். 612/2012 வழக்கு எனக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி வழக்கு சொத்து எனக்கு பாத்தியமில்லை என்று தெரியவந்ததற்கு பின்பு இந்த பிரதிவாதி இ,ம.எண். 421/2018 தாக்கல் செய்து புது தாவா தாக்கல் செய்வதால் அ.வ.எண். 612/2012 ஐ தள்ளுபடி செய்ய மனு கொடுத்தார் என்றால் சரிதான்.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

3) மேற்படி மனுவும் , தாவாவும் ஒரே தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்தின் பேரில் உரிமையில்லாததால் தான் மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கு மற்றும் மனுவின் பேரில் மேல்முறையீடு பிரதிவாதி செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தும் இதர சொத்துக்களும் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டா பெற்றவுடன் பிரதிவாதி தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் நான் தான் வீடு கட்டினேன் அவர் வீடு எதுவும் கட்டவில்லை. அந்த வீட்டிற்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) தாவா சொத்து சொத்து விவரத்தில் காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லும் கற்பனையான வீட்டிற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டா பெற்றவுடன் பிரதிவாதி வீடு கட்டி தன் பெயரில் அரசாங்க வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. மின் இணைப்பு பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான் நான் அது பற்றி கேட்டதற்கு வாடகை கொடுத்துவிடுவதாக கூறினார், மேற்படி விவரத்தை எனது பிராதில் நான் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். 2019 ம் ஆண்டுதள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கின் பேரில் தான் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.,

5) மேற்படி தாவா தீர்ப்பிற்கும் இந்த தாவாவிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய சொத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். எனது சொத்தை யாருக்காவது கிரயம் கொடுத்துள்ளேனா என்றால் எனது உறவினர் ஆறுச்சாமிக்கு 1 1/2 செண்ட் கிரயம் கொடுத்தேன். பத்திரம் உள்ளதா

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

என்றால் அவரிடம் இருக்கும். ரூ.27,600க்கு நான் ஆறுச்சாமிக்கு கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கிரயம் கொடுத்த பத்திரத்திலேயே பிரதிவாதி தங்கவேல் இடத்திற்கும் தெற்குஎன்று சக்குபந்தி கண்டு ஆவணம் உள்ளது என்றால் சரிதான்.

6) தாவா சொத்து முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டிருந்தால் எப்படி பிரதிவாதி வீடு கட்டியிருப்பார் என்றால் அவர் வீடே கட்டவில்லை. எனது வீடு ஆகும். தாவா சொத்து முதலில் ஓலை சாளையாக இருந்தது பின்பு வீடு கட்டினேன். மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் புதிய காலை எண். 447/21 என்றால் சரிதான். பட்டாப்படி பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வரி செலுத்தி வரும்அவரது வீட்டிற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அது எனது வீடு ஆகும். பிராதில் கண்ட சொத்து விவரம் தவறு என்றும் அதற்காக எனது தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி